# 3

# கிறிஸ்துவுக்குள் வாழ்தல்

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் " (எபே. 1:3).*

உலகின் பல கலாச்சாரங்களில் ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் ஒப்புக் கொடுத்தலை அடையாளப்படுத்த திருமண மோதிரத்தை அணிவிப்பது என்பது வழக்கமாக உள்ளது. ஒப்புக் கொடுத்தலின் இந்த காணக்கூடிய அடையாளமானது சிறியதாக (பெரும்பாலும் விலை உயர்ந்ததாக) உள்ளது. ஆனால் இதன் அர்த்தமானது வாழ் நாள் முழுவதற்குமான ஒரு வாக்குறுதியைக் குறிக்கின்றது. திருமணத்தின் மிகச் சிறிய இந்த அடையாளமானது, சிறிய பொருட்கள் பெரும்பாலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை நமக்கு நினைவூட்டுகின்றது.

"கிறிஸ்துவுக்குள்" என்ற புதிய ஏற்பாட்டின் ஒரு வார்த்தைப் பதமானது சில வேளைகளில் கவனத்தைக் கவராததாக இருப்பினும், எப்பொழுதுமே மிகுந்த அர்த்தம் நிறைந்ததாக உள்ளது. ஆவிக்குரிய வகையில் மிகக் கனத்த கருத்தின்றி இது ஒருக்காலும் தோற்றமளிப்பதில்லை. இது "கிறிஸ்துவுக் குள்" (ரோமர் 12:5) என்றோ, "கிறிஸ்து இயேசுவுக்குள்" (ரோமர் 3:24) என்றோ, "நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்" (ரோமர் 8:39) என்றோ, "அவருக்குள்" (2 கொரி. 5:21) என்றோ, "கர்த்தராகிய இயேசுவுக் குள்" (ரோமர் 14:14) என்றோ, "கர்த்தருக்குள்" (1 கொரி. 4:17) என்றோ, "அவருடைய குமாரனுக்குள்" (1 யோவா. 5:11) என்றோ, "இயேசுவுக்குள்" (எபே. 4:21) என்றோ, "அவருக்குள்" (எபே. 4:15), "அவர் மேல்" (எபே. 2:21) என்றோ, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்" (2 தெச. 3:12) என்றோ, "இயேசுவுக்குள்" (1 தெச. 4:14) என்றோ, அல்லது "அவருடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவுக்குள்" (1 யோவா. 5:20) என்ற வார்த்தைகளாய் இருந்திருக்கலாம்; ஆனால் இதன் இறையியல் ரீதியான உய்த்துணரும் அர்த்தமானது கவனிக்காமல் விட்டு விடப்பட முடியாது. இது கிறிஸ்து வுடன் ஒன்றிப்பதை, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குள்ளாக வாசம் பண்ணுவதை யோசனையாகத் தெரிவிக்கின்றது. ஆகையால், இந்த வார்த்தைப் பதத்தின் மறைமுகக் கருத்தை நாம் கண்டு கொள்ளாதிருந்தால் தேவனுடைய திட்டத்தில் சபையின் அர்த்தத்தையும் இடத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியாது.

“கிறிஸ்துவுக்குள்” மற்றும் “சபைக்குள்” என்ற இரண்டு வார்த்தைப் பதங்களும் புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களில் ஒரே அர்த்தம் கொண்டுள்ளன என்பது அவசியமானதாகும். கிறிஸ்து உயர்த்தப்பட்டதை எழுதுகையில் பவுல், எல்லாமும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, அவர் “சபைக்கு” எல்லாவற்றிற்கும் மேலான தலையாக ஆகியிருந்தார் என்று உறுதிப்படுத்தினார், சபை என்பது “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரம்” (எபே. 1:22, 23) என்று அவர் கூறினார். பவுலின் கூற்றுப்படி, சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது, ‘‘கிறிஸ்துவுக்குள்’’ இருத்தல் என்பது கிறிஸ்துவின் சபைக்குள் இருத்தலாகும்.

புதிய ஏற்பாட்டில் (சிறப்பாகப் பவுலின் எழுத்துக்களில்) ‘‘கிறிஸ்துவுக்குள்’’ என்ற வார்த்தைப் பதத்தையோ அல்லது இதற்கு இணையான வார்த்தைப் பதத்தையோ நாம் ஆராய்ச்சி செய்யும் பொழுது, சபை மற்றும் அதனுடனான நமது உறவுமுறை ஆகியவற்றின் மிக ஆழ்ந்த இறையியல் அர்த்தத்தை நாம் கண்ணோக்குகின்றோம்.[1] இதைப் பற்றிய கவனம் நிறைந்த ஒரு ஆலோசனையானது அவருடைய சரீரத்திற்குள் நமக்குள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் மாபெரும் தன்மையை நமது இருதயங்களில் ஆழப்பதியச் செய்கின்றது. இந்த வார்த்தைப் பதத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலின்றி, கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராயிருத்தலின் அர்த்தத்தினுடைய ஆவிக்குரிய கண்ணோக்கை நாம் பெறலாம் என்று நம்பியிருக்க முடியாது.

## சிறப்புரிமைக்கான ஒரு இடம்

முதலாவதாக, ‘‘கிறிஸ்துவுக்குள்’’ என்ற வார்த்தைப் பதமானது கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்றது. ‘‘கிறிஸ்துவுக்குள்’’ நாம் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாயிருக்கின்றோம்.

எபே. 1:3-14ன் விரிவாக்கப்பட்ட போதனை முறைமையில், பவுல் ‘‘கிறிஸ்துவுக்குள்’’ உள்ளவர்களைத் தேவன் தமது தேர்ந்து கொண்டவர்களாக்கிக் கொண்டதற்காக அவருக்கு நன்றி செலுத்துகின்றார்:

> தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் (எபே. 1:4-6).

ஒருவரை இரட்சித்துக் கொள்ளும்படியும் இன்னொருவரை இழந்து போகச் செய்யும்படியுமாக தனிநபர்களின் முன் குறித்தலைப் பற்றிப் பவுல் எழுதவில்லை. கிறிஸ்துவுக்குள் வந்து அவரில் உண்மையுடன் வாசம்

பண்ணுகின்ற எல்லாருக்குமான தேவனுடைய ஆச்சரியமான முன் குறித்தலைப் பற்றி அவர் சுட்டிக்காட்டினார். தேவன் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக வருகிறவர்கள் யாவரையும் தமது சுவிகாரப் பிள்ளைகளாகத் தேர்ந்து கொள்ளும் சிறப்புரிமை உள்ள இடமாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தை உலகத் தோற்றத்திற்கு முன்பே தேர்ந்து கொண்டார்.

இந்த தெய்வீகத் தேர்ந்தெடுத்தலானது மனிதருடைய தேர்ந்து கொள்ளும் சுயாதீனத்திற்கு முரண்படுவதில்லை. மாறாக, தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுடன் இருப்பதைத் தேர்ந்து கொள்வதற்கான சுயாதீனத்தை இது மனிதருக்குக் கொடுக்கின்றது. கிறிஸ்துவின் சரீரத்தை (சபையை) இரட்சித்துக் கொள்ளும்படியாகத் தேவன் ஏற்கனவே தேர்ந்து கொண்டார்; ஆனால் மனிதர் அந்த சரீரத்திற்குள் வருவதைத் தேர்ந்து கொள்ள வேண்டும், மற்றும் அதற்குள் நிலைத்திருப்பதையும் அவர் தேர்ந்து கொள்ள வேண்டும்.

நோவா இரட்சிக்கப்படுவதற்குத் தேவன் ஒரு இடத்தைத் தேர்ந்து கொண்டார் (ஆதி. 7:1), ஆனால் நோவாவும் அவரது குடும்பத்தாரும் அதற்குள் பிரவேசித்து, அதற்குள்ளே தங்கியிருக்க வேண்டியிருந்தது (ஆதி. 7:7). பேழையானது நோவாவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சிறப்புரிமையுள்ள இடமாக இருந்தது. பூமியில் இருந்த எல்லா மக்களிலும் நோவாவும், அவர் மனைவியும், மகன்கள் மற்றும் மருமகள்கள் ஆகியோரும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகப் பேழைக்குள் இருந்தனர் - அவர்கள் தேவனுடைய கிருபையினாலும் பராமரிப்பினாலும் பாதுகாக்கப் பட்டு, தேவையானவைகள் வழங்கப்பெற்றனர்.

நாம் பரலோகம் செல்லும் பொழுது, பரலோகத்தின் நுழை வாயிலருகே ஒரு பெரிய விளம்பரப் பலகை போன்றதொரு அடையாளத்தைக் காண்போம் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். அந்த விளம்பர பலகையின் முன் புறத்தில் “என்னிடத்தில் வாருங்கள்” என்ற வார்த்தைகள் இருக்கும். நாம் பரலோகத்தில் நுழைகையில், நாம் அவ்வார்த்தைகளை வாசித்து, இரட்சிப்புக்காகவும், ஒவ்வொரு மனிதரும் அந்த அழைப்புக்குப் பதில் அளிக்கத் தேவன் கொடுத்த தேர்ந்தெடுப்பாகவும் அது இருப்பதாகச் சிந்திப்போம். பரலோகத்தில் நுழைந்த பிறகு, நாம் அந்த விளம்பரப் பலகையின் பின்புறத்தைக் கண்டு வாசிக்கத் திரும்புவோம். அதில் “தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்” என்று எழுதப்பட்டிருக்கும். பின்பு நாம் தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே கிறிஸ்துவின் சரீரத்தைத் தேர்ந்து கொண்டதையும், அந்த சரீரத்திற்குள் பிரவேசித்து அதில் நிலைத்திருப்பவர்கள்மீது தேவன் ஒப்பிட முடியாத சிறப்புரிமையைப் பொழிந்ததையும் சிந்தித்துப் பார்ப்போம்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் பிரவேசிக்கின்ற எவரொருவரும் சிறப்புரிமையின் இடத்திற்குள், தெய்வீகத் தேர்ந்தெடுப்புள்ள இடத்திற்குள் பிரவேசிக்கின்றார். நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோமா இல்லையா என்பது தற்செயலானதல்ல, ஆனால் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்ற விஷயமாய் உள்ளது. இரட்சிப்புக்கான இடத்தைத் தேவன் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார், ஆனால் அந்த இடத்தில் பிரவேசித்து,

அதில் தங்கியிருப்பதை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசிப்பதை நாம் தேர்ந்துகொள்ளும் பொழுது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தின்படி நம்மை அவரது பிள்ளைகளாகவும் சுதந்திரராகவும் தேர்ந்து கொள்ளுகின்றார்.

## அளிப்புக்கான ஒரு இடம்

"கிறிஸ்துவுக்குள்" இருக்கின்ற நபர் சிறப்புரிமைக்கான தமது இடத்தில் இருப்பதுடன், தேவனுடைய ஆவிக்குரிய ஏராளமான அளிப்புகளுக்கான வழியையும் கொண்டுள்ளார். கிறிஸ்துவின் சரீரமானது, "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரம்" (எபே. 1:23) என்று பவுல் எழுதினார். மேலும் அவர், "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் ... அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20) என்றும் கூறினார். எனவே அவர், "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர் களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2:10) என்று கூற முடிந்தது.

தேவன் நமக்கு அளிக்கின்ற ஆவிக்குரிய ஒவ்வொரு ஆசீர்வாதமும் ''கிறிஸ்துவுக்குள்'' காணப்படுகின்றது. எபேசியர் 1ல் பவுல் தமது போதனைக் கருத்தைத் தொடங்குகையில், கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு ஏற்படுத்தியுள்ளவைகளை வீறு கொண்ட ஒரு வாக்கியத்தில் அவர் சுருக்கியுரைக்கின்றார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங் களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக் கிறார்" (எபே. 1:3). பவுலின் "சகல" என்பது முற்றிலும் எல்லாவற்றையும் உள்ளடக்குவதாக உள்ளது. இருப்பினும், ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வந்து அவரில் தங்கி நிலைத்திராமல், தேவனுடைய ஏராளமான, மட்டுமீறிய ஆவிக்குரிய அளிப்புகளைப் பெறமுடியாது.

*தேவன் நமக்கு அளிக்கின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஒவ்வொன்றும் "கிறிஸ்துவுக்குள்" காணப்படுகின்றது.*

"கிறிஸ்துவுக்குள்" நமக்கு வழி வகுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். முதலாவது, நாம் ''கிறிஸ்துவுக்குள்'' இரட்சிப்புக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளோம். "அவருக்குள்" நாம் மன்னிப்பைப் பெற்றுள்ளோம்: "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1:7). நாம் "கிறிஸ்துவுக்குள்" ஒரு புது சிருஷ்டியாய் இருக்கின்றோம்: ''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5:17). நாம் "இயேசு

கிறிஸ்துவுக்குள்'' நித்திய ஜீவனைப் பெற்றுள்ளோம்: ''ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" (2 தீமோ. 2:10).

இரண்டாவது, நாம் "கிறிஸ்துவுக்குள்" குமாரத்துவ/புத்திர சிலாக்கியம் பற்றிய ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளோம். நாம் "கிறிஸ்து இயேசுவுக்குள்" பிதாவினிடத்தில் சேருவதற்கு முழுமையான வழி வகையைப் பெற்றிருக் கின்றோம்: ''முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்"; "அந்தப் படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (எபே. 2:13, 18). நாம், "அவருக்குள்" ஒரு நித்திய சுதந்தரத்தைப் பெற்றுள்ளோம்: "தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார் ... நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்'' (எபே. 1:10, 12).

மூன்றாவது, நாம் "கிறிஸ்துவுக்குள்" பாதுகாப்பு பற்றிய ஆசீர்வாதங் களைப் பெற்றுள்ளோம். நாம் "அவருக்குள்" பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டுள்ளோம்: "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷ மாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப் பட்டீர்கள்" (எபே. 1:13). நாம் "கிறிஸ்துவுக்குள்" ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுதலையாய் இருக்கின்றோம்: "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" (ரோமர் 8:1).

பரலோகத்திலிருக்கிற நமது பிதா கிறிஸ்துவின் சரீரத்தை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கும் இடமாகத் தேர்ந்து கொண்டுள்ளார். அந்த சரீரத்தில் பிரவேசித்து அதில் தங்கித் தரித்திருப்பவர்கள் மட்டுமே அவரது தாராளமான ஆசீர்வாதங்களைப் பெற வழி வகையுடையவர்களாய் இருக்கின்றனர்.

பழைய ஏற்பாட்டின் இந்த எடுத்துக்காட்டை யோசித்துப் பாருங்கள். இஸ்ரவேலர்கள் எகிப்து நாட்டை விட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் நாட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். முதல் பஸ்கா நடந்து கொண்டிருந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை அவர்கள் வீடுகளின் நிலைக்கால்களின் மேல் தெளிக்க வேண்டும் என்றும் பஸ்கா அன்று மாலையில் அவர்கள் தங்கள் வீடுகளில் இருக்க வேண்டுமென்றும் தேவன் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார் (யாத். 12:22). அவரது அறிவுறுத்தலைச் செயல்படுத்தாதவர்கள் தேவன் கடந்து செல்லுகையில் தங்கள் முதற்பேறானவர்களை மரணத்தினால் இழந்து போவார்கள். வரலாறு படைத்த அந்த மாலை நேரம் எவ்வளவு பயபக்தி நிறைந்த தன்மையோடு அணுகியிருக்கும்! இஸ்ரவேல் குடும்பம் ஒவ்வொன்றும் இரவு முழுவதும் பயபக்தியான கவனிப்புடன் தங்கியிருந்திருக்கும். மூத்த

*மகன் ஒருவன் அந்த மாலை நேரம் தொடங்குவதற்கு முன்பு தன் தந்தையிடம் பின்வருமாறு கேட்டதை நாம் கற்பனை செய்ய முடியும்: "அப்பா, இரத்தமானது வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்களிலும் தெளிக்கப்பட்டாயிற்று என்பதை உறுதிப்படுத்திக் கொண்டீர்களா?" தகப்பன் அதற்கு, "ஆம், என் மகனே, நானே அதைச் செய்தேன். அது செய்யப்பட்டுள்ளது" என்று பதில் அளிக்கின்றார். சற்று நேரம் கழித்து மகன் மீண்டும், "அப்பா நீங்கள் அதைச் சரியானபடி செய்தீர்கள் என்று நிச்சயப்படுத்திக் கொள்ள நாம் பரிசோதிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? மாலை நேரம் தொடங்க இருக்கின்றது, நாம் வீட்டிற்குள்ளேயே இருந்தாக வேண்டும், பின்பு அதைப் பரிசோதனை செய்ய முடியாதே" என்று கேட்கின்றான். தந்தை, "சரி, எல்லாம் சரியாகச் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நான் மீண்டும் பரிசோதிப்பேன்" என்று கூறுகின்றார். தேவன் அறிவுறுத்தியிருந்தபடி வாசல் நிலைக்கால்களிலும், மேல் சட்டங்களிலும் இரத்தம் பூசப்பட்டிருப்பதைத் தகப்பன் பரிசோதித்து உறுதிப்படுத்து கின்றார். தந்தை திரும்பிவந்து தம் மகனை பின்வரும் உறுதிக்கூற்றுடன் ஆறுதல் படுத்துகின்றார்: "எல்லாம் நன்றாயுள்ளது மகனே, நாம் தேவனு டைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கின்றோம். தேவனுடைய சித்தத்தில் நீ பாதுகாப்பாய் இருக்கின்றாய்."*

*அவர்கள் தேவனுடைய அறிவுறுத்தல்களின் வட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருந்ததால் அந்தத் தந்தை தமது மகனுக்கு உறுதியளிக்க முடிந்தது. அது போலவே, நாம் "கிறிஸ்துவுக்குள்" தேவனுடைய சித்தம் என்ற வட்டாரத்திற்குள் உள்ளவர்களாய் இருக்கின்றோம். நமது பிதாவானவர், நாம் அவருடைய குமாரனுக்குள்ளாக உண்மையுடன் நிலைத்திருக்கும் வரைக்கும் நமது ஆவிக்குரிய தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார்.*

## வாக்குத்தத்தத்தின் ஒரு இடம்

*மூன்றாவதாக, எதிர்காலத்திற்கான நமது ஒரே நம்பிக்கை "கிறிஸ்துவுக்குள்" உள்ளது. இந்த வாழ்வுக்கான உண்மையான, தவறாத வழிகாட்டியென்ற வகையில் மனித ஞானம் தவறி விடுகின்றது, ஆனால் கிறிஸ்துவுக்குள், "ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங் களெல்லாம் அடங்கியிருக்கின்றது" (கொலோ. 2:3). இந்த உலகமானது அழிவுக்கென்று விதிக்கப்பட்டுள்ளது (2 பேது. 3:10). ஆகையால் இந்த உலகத்தின் அடிப்படையில் அமைந்த எந்த ஒரு நம்பிக்கையும் கடைசியில் அழிந்து போகும், ஆனால் "கிறிஸ்துவுக்குள்" நாம் ஒரு நித்தியமான, மறைந்து போகாத சுதந்தரத்தைப் பெற்றுள்ளோம் (எபே. 1:12).*

*கிறிஸ்துவுக்குள் நமது நம்பிக்கையைப் பற்றி யோவான், "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்" (1 யோவா. 5:11) என்று எழுதினார். இந்த நித்திய ஜீவனானது இரு வழிமுறைகளில் நமக்கு வருகின்றது: இந்த உலகத்தில் நிறைவான வாழ்வு என்ற வகையிலும், மற்றும்*

இனி வரும் உலகத்தில் நித்திய ஜீவன் என்ற வகையிலும், நாம் கிறிஸ்துவுக்குள் இந்த வாழ்வில் நம்பிக்கையையும் இனிவரும் வாழ்வுக்கு நம்பிக்கையையும் பெற்றுள்ளோம் - இது இப்பொழுது நிறைவுள்ள வாழ்வாகவும், பரலோகத்தில் நித்திய வாழ்வாகவும் உள்ளது. "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா. 10:10) என்று இயேசு கூறினார். மேலும் யோவான், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1 யோவா. 5:12) என்று கூறினார். இன்னும் அதிகமாக, யோவான் "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், ... தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவா. 5:13) என்றும் கூட எழுதினார்.

பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் கீழ், தற்செயலாக ஒருவரைக் கொன்ற மனிதன், "இரத்தப் பழி வாங்குகிறவனுடைய" கைக்கு அதாவது தனது உறவினரின் மரணத்திற்காக பழி வாங்கத் தேடுகிறவரின் கைக்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக அடைக்கலப் பட்டணம் ஒன்றிற்கு ஓடிப்போக முடிந்திருந்தது (யோசுவா 20). அடைக்கலப் பட்டணத்திற்குள் அவர் இருக்கும் வரைக்கும், பாதுகாக்கப்பட்டிருக்க முடிந்தது. அந்தப் பட்டணத்திற்குள் அவர் ஒரு சாதாரண வாழ்வையும் ஒரு சாதாரண எதிர் காலத்தையும் கொண்டிருக்க முடிந்தது. அவர் அந்தப் பட்டணத்தை விட்டுச் சென்றால் இரத்தத்திற்காகப் பழி தீர்ப்பவரால் தொடர்ந்து துரத்தப்பட்டு பெரும்பாலும் அவரால் கொல்லப்படுவார். அவர் அடைக்கலப் பட்டணத்தில் மட்டுமே ஒரு வாழ்வும் ஒரு எதிர்காலமும் பெற்றிருந்தார்.

அது போலவே, நமது ஒரே நம்பிக்கை "கிறிஸ்துவுக்குள்" மட்டுமே உள்ளது. இந்த உலகில் நிறைவான ஒரு வாழ்வுக்கு அளிப்புகளும் நித்தியத்திற்கான பாதுகாப்புள்ள நம்பிக்கையும் அவருக்குப் புறம்பே நாம் பெற்றிருப்பதில்லை. கிறிஸ்துவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்த நிலையில் புறஜாதியார்கள் இவ்வுலகத்தில் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தார்கள் என்று பவுல் கூறுகின்றார் (எபே. 2:12). அது போலவே, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்ற எவரொருவரும் இவ்வுலகத்தில் நம்பிக்கையற்ற வராகவே இருக்கின்றார்.

## முடிவுரை

"கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தைப் பதத்தினுடைய தனிச் சிறப்பின் வெளிச்சத்தில் "நாம் கிறிஸ்துவுக்குள் எப்படி வர முடியும்?" என்று கேட்காமல் இருந்தால் மதியீனமுள்ளவர்களாயிருப்போம். நமது கேள்விக்கு இரண்டு வேத வசனப் பகுதிகள் பதில் அளிக்கின்றன. முதலாவதாகப் பவுல் ரோமர் 6:3ல் நாம் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் மூலமாகக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்படுவதாகக் கூறினார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய

*மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?"* இரண்டாவதாகப் பவுல் *கலா. 3:27*ல் இதே சத்தியத்தை நமக்குத் தந்தார்: *"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே."*

நாம் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி மற்றும் தேவனிடத்திற்குத் திரும்பி, இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிட்டு, மற்றும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்பொழுது, தேவனுடைய கிருபையுள்ள கிரியையால் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்படுகின்றோம். நமது *நிலையானது* உடனடியாக மாற்றப்படுகின்றது, ஏனெனில் நாம் சிறப்புரிமை, அளிப்பு மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவை உள்ள இடத்திற்குக் கொண்டு வரப் படுகின்றோம். தேவ வசனம் ஊட்டப்படுதல், கிறிஸ்து மற்றும் தேவனுடைய குடும்பத்துடன் ஐக்கியம் மற்றும் வெளிச்சத்தில் நடத்தல் ஆகியவற்றினால் நாம் வளருகையில் நமது நிலைமையானது தொடர்ந்து மாறும்.

தனது சொந்த நிலத்தில் எண்ணெய் வளம் இருந்ததைக் கண்டறிந்த நாமகரணக் கூட்ட சபையொன்று பற்றி நான் வாசித்துள்ளேன். அது ஒரு பொங்கி வழியும் ஊற்றாக இருந்தது, மற்றும் அந்த சபையானது திடீரென்று செல்வமிக்கதாகியது. அவர்கள் உடனடியாக தங்கள் உறுப்பினர்த்துவத்தை நிறுத்தி வைத்துவிட்டு, மாதாந்திர இலாபங்களைத் தங்கள் உறுப்பினர்களுக்கிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ள முடிவு செய்தனர். இந்த சபையானது திடீரென்று ஒரு வியாபாரமாகி, அதற்குள் இருப்பவர்களுக்கு மிகப் பெரிய பொருள் செல்வங்களைக் கொண்டு வந்தது.

புதிய ஏற்பாட்டின் சபையானது இந்த நாமகரணக் கூட்டத்திலிருந்தும், மற்றும் உள்ள எல்லா நாமகரணக் கூட்டங்களில் இருந்தும் மிகவும் வித்தியாசப்பட்டதாக உள்ளது! இது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக, பரலோகத்தின் செல்வங்களால் நிரப்பப்பட்டதாக உள்ளது. இதன் உறுப்பினர்த்துவமானது ஒருக்காலும் நிறுத்தப்படுவதில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் எவரொருவரும் இதற்குள் பிரவேசித்து தேவனுடைய ஏராளமான ஆசீர்வாதங்களில் பங்கு பெற முடியும். இயேசுவின் மூலமாக ஆவியினாலே சகல ஆசீர்வாதங்களுக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் எல்லாக் காலத்திலும் தாராளமான வழி வகை பெற்றுள்ளனர். பரலோக வங்கி பூட்டப்பட்டிருப்பதையோ அல்லது ஆவிக்குரிய செல்வங்களின் அளிப்பு தீர்ந்து போனதால் அளிக்கப்படாமல் இருப்பதையோ ஒருவரும் ஒரு நாளும் காண மாட்டார்கள்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் தேவனுடைய பிள்ளையாயிருக்கும் சிறப்புரிமையையும், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் மற்றும் நித்திய ஜீவனின் நம்பிக்கையையும் பெற்றிருப்பதால், "நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா?" என்பதைக் காட்டிலும் பெரிய கேள்வி வேறெதையும் நம்மைப் பற்றி கேட்க முடியாது.

குறிப்பு

[1]பிற்சேர்க்கை 3 என்ற பகுதியானது "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தைப் பதமும் மற்றும் அதற்குச் சமமான மற்ற எல்லா வார்த்தைப் பதங்களும் புதிய ஏற்பாட்டில் தோன்றுமிடங்களை உள்ளடக்கியிருக்கின்றது. இந்த அட்டவணையானது உங்களை, இந்த வார்த்தைப் பதத்தின் பயன்பாட்டைக் கவனமாகப் படிக்கவும், சபையின் அர்த்தத்திற்கு இதன் அளப்பரிய மறைமுக அர்த்தத்தைக் கவனிக்கவும் அனுமதிக்கும்.

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. ''கிறிஸ்துவுக்குள்'' என்ற வார்த்தைப் பதமானது புதிய ஏற்பாட்டில் தோன்றும் வித்தியாசப்பட்ட வழிமுறைகளை அட்டவணைப் படுத்தவும்.
2. "கிறிஸ்துவுக்குள்" மற்றும் "சபைக்குள்" என்ற வார்த்தைப் பதங்களை ஒப்பிடவும்.
3. எபேசியர் 1:4-6ல் பவுல் எழுதிய முன் குறித்தல் பற்றி விவரிக்கவும்.
4. முன் குறித்தல் என்ற கருத்தை நோவா, அவரது குடும்பம் மற்றும் பெருவெள்ளம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தவும்.
5. "கிறிஸ்துவுக்குள்" நாம் கொண்டுள்ள திறவுகோல் (முக்கிய) ஆசீர்வாதங்கள் சிலவற்றை அட்டவணைப்படுத்தி, அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விவரிக்கவும்.
6. ''நிறைவான ஜீவனை'' ''நித்திய ஜீவனுடன்'' தொடர்புபடுத்தவும்.
7. பழைய ஏற்பாட்டு யுகத்தின் அடைக்கலப் பட்டணங்களையும் அவற்றின் பணிப் பொறுப்பையும் விவரிக்கவும்.
8. "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பதுடன் தொடர்பாக எபே. 2:12ஐ விவரிக்கவும்.
9. கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தல் பற்றி ரோமர் 6:3 கூறுவது என்ன?
10. கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தல் பற்றி கலா. 3:27 கூறுவது என்ன?
11. கிறிஸ்துவுக்குள் நமது நிலையை கிறிஸ்துவுக்குள் நமது நிலைமையுடன் ஒப்பிடவும்.
12. நாம் ''கிறிஸ்துவுக்குள்'' இருக்கின்றோம் என்பதை நாம் எவ்விதத்தில் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்?